RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 229 | ஆகஸ்டு.21 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## 75 டன் எடையுள்ள செயற்கைக்கோளை விண்ணில் நிலைநிறுத்த முயற்சி: இஸ்ரோ தலைவர் நாராயணன் தகவல்



சென்னை, ஆக.21-

ஏறத்தாழ 75 டன் எடை கொண்ட செயற்கைக் கோள்களை விண்ணில் நிலைநிறுத்துவதற்காக 40 மாடி உயரம் கொண்ட ராக் கெட்டை உருவாக்கி வரு வதாக இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறினார்.

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா வில் சிறப்பு விருந்தின ராகப் பங்கேற்ற இஸ்ரோ தலைவர் வி.நாராயணனுக் கு, தெலங்கானா ஆளுநர் ஜிஷ்ணு தேவ் வர்மா கவுரவ டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தார். தொடர்ந்து நாராயணன் பேசியதாவது: நடப்பாண்டில் இந்திய ராக்கெட்டுகளைப் பயன் படுத்தி அமெரிக்காவின் 6,500 கிலோ எடையுள்ள தகவல் தொடர்பு செயற் கைக்கோளை விண்வெளி யில் நிலைநிறுத்தும் பணி கள்மேற்கொள்ளப்பட உள் ளன. இதுதவிர, தொழில் நுட்ப செயல் விளக்கச் செயற்கைக்கோள் (TDS) மற்றும் தகவல் தொடர்பு செயற்கைக்கோளான ஜிசாட்7ஆர் ஆகியவற்றை யும் விண்ணில் ஏவ திட்ட மிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஜிசாட் 7 (ருக்மிணி) செயற்கைக் கோளுக்கு மாற்றாக இந் திய கடற்படைக்காக ஜிசாட்7ஆர் பிரத்யேக மாகவடிவமைக்கப்பட்டுள் ளது. மறைந்த விஞ்ஞானி அப்துல் கலாம் உருவாக் கிய முதல் ராக்கெட் 17 டன் எடை கொண்டது. இது35 கிலோ எடையை பூமியின் தாழ்வான சுற்று வட்டப் பாதையில் செலுத் தும் திறன் கொண்டது. ஆனால், தற்போது 75,000 கிலோ எடையுள்ள செயற் கைக்கோளை தாழ்வான சுற்றுப்பாதையில் செலுத் தும் ராக்கெட்டை நாங்கள் உருவாக்கி வருகிறோம். இந்த ராக்கெட் 40 மாடி கட்டிடம் உயரம் கொண் டது. தற்போது இந்தியா வில் 55 செயற்கைக்கோள் கள் சுற்றுப்பாதையில் உள் ளன. இந்த எண்ணிக்கை 3 முதல் 4 ஆண்டுகளில் 3 மடங்காக அதிகரிக்கப் படும். இவ்வாறு அவர் பேசினார்.

# அன்பும், விட்டுக்கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும்

## 50வது மணநாளில் ஸ்டாலின் நெகிழ்ச்சி





சென்னை: ஆக.21-

எதிர்பார்ப்புகளற்ற அன்பும், விட்டுக்கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும் என தனது 50வது திருமண நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இளைய தலைமுறையினருக்கு அறிவுரை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "அரைநூற்றாண்டாக என் வாழ்வின் துணையாக என்னில் பாதியாக துர்கா அவர்கள் நுழைந்து, தன்னுடைய அன்பால் மணவாழ்வை மனநிறைவான வாழ்க்கையாக அளித்துள்ளார். அவர் மீதான அளவற்ற அன்பே என் நன்றி.

எதிர்பார்ப்புகளற்ற அன்பும் விட்டுக்கொடுத்தலும் இல்வாழ்வை நல்வாழ்வாக்கும் என இளைய தலைமுறை யினருக்குச் சொல்லிக் கொள்கிறோம். வீடும் நாடும் போற்றும் வாழ்வை அனைவரும் வாழ்ந்திட விழைகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக நேற்று, திமுக கூட்டணிக் கட்சித் தலைவர்கள் முதல்வர் ஸ்டாலின், துர்கா ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து கூறினர். அது தொடர்பாக பகிரப்பட்ட பதிவில், "உயிரென உறவென திருமிகு துர்கா அவர்கள் என்னில் பாதியாய் இணைந்து 50 ஆண்டுகள் ஆகின்றன.

இத்தருணத்தில் பேரன்புகொண்டு இல்லம்தேடி வந்து எங்களை வாழ்த்திய கொள்கை உறவுகளான தோழமை இயக்கத் தலைவர்களுக்குக் குடும்பப் பாச உணர்வுடன் நன்றி கூறி அகமகிழ்கிறேன்." என்று முதல்வர் குறிப்பிட்டிருந்தார்.



## "தமிழர் குடியரசு துணை தலைவராக ஆதரவு அளிக்க வேண்டும்" பிரேமலதா விஜயகாந்த்

மயிலாடுதுறை, ஆக.21-

தமிழர் ஒருவர் குடியரசு துணைத் தலைவராவதற்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவிததுள்ளார். மயிலாடு துறையில் நேற்று தேமுதிக சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா 'உள்ளம் தேடி, இல்லம் நாடி' பிரச்சார பயணம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியது: மயிலாடுதுறை தொகுதி ஏற்கெனவே தேமுதிக கோட்டையாக இருந்தது. வரும் தேர்தலில் மீண்டும் இத்தொகுதியில் தேமுதிக வெற்றிபெறும். தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் தொகுதியிலேயே கூட பேருந்து வசதிகள் இல்லை. தெருவுக்கு 10 டாஸ்மாக் கடைகள் திறந்ததைவிட வேறு பெருமை எதுவும் இல்லை.

தேமுதிக வெற்றி பெற்றால் டாஸ்மாக் கடைகள் படிப்படியாக குறைக்கப்படும் என்றார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் சி.பி.ராதாகிருஷ்ணன் குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் வெற்றி பெற்றால் அது நிச்சயம் தமிழகத்துக்கும், தமிழர்களுக்கு பெருமை மிகுந்ததாக இருக்கும். அவர் வெற்றி பெற அனைவரும் ஒன்றிணைந்து ஆதரவு அளிக்க வேண்டும்.

ஜன.9ல் கடலூரில் நடைபெறும் கட்சி மாநா ட்டில் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும். திமுக ஆட்சி நிறைகளும், குறைகளும் நிறைந்ததாக இருக்கிறது. தனது கூட்டத்தின் இடையே, அடிக்கடி ஆம்புலன்ஸ் வாகனம் வேண்டுமென்றே செல்வதாக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளது குறித்து கேட்டதற்கு, இது ஆண்டாண்டு காலமாக நடக்க கூடிய ஒன்றுதான். நாங்களே அதை சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆம்புலன்ஸ் வாகனம் வரும், மின் விளக்குகளை அணைத்து விடுவார்கள். இதுபோன்ற நிறைய பிரச்சினைகள் வரும் என்றார். தேமுதிக பொரு ளாளர் சதீஷ், மாவட்டச் செயலாளர் பண்ணை சொ. பாலு, அவைத் தலைவர் கிருஷ் ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஏழுமலையான் தரிசனத்துக்கு இடைத்தரகரை அணுக வேண்டாம்: திருப்பதி தேவஸ்தானம் வேண்டுகோள்

திருமலை, ஆக.21-

திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப் பதாவது: கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹைதரா பாத்தை சேர்ந்த விஸ்வ நாத் குடும்பத்தினருக்கு திருப்பதி ஏழுமலையான் கோயிலில் விஐபி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரு வதாக கூறி, நடராஜ் நரேந் திர குமார் மற்றும் நடராஜ் சர்மா ஆகியோர் ரூ.90 ஆயிரம் பெற்றுள்ளனர். அதன் பிறகு பணத்தை கேட்கும்போதெல்லாம் ஏதாவது காரணத்தை கூறி ஏமாற்றி உள்ளனர்.

இதுதொடர்பாக விஸ் வநாத் குடும்பத்தினர் திரு மலை விஜிலென்ஸ் அதி காரிகளிடம் புகார் அளித் தனர். விசாரணையில், பணத்தை பெற்ற இரு வரும் திருப்பதி தேவஸ் தான ஊழியர்கள் இல்லை என்பது உறுதி செய்யப் பட்டது. இருவரும் 15க் கும் மேற்பட்ட பக்தர்களை ஏமாற்றி பணம் பறித்திருப் பதும் தெரியவந்தது.

இதனை தொடர்ந்து இருவர் மீதும் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பக்தர்கள் யாரும் போலி தேவஸ் தான இணையதளத்தில் முன்பதிவு செய்ய வேண் டாம். தரிசனத்துக்கோ அல்லது தங்கும் அறை களுக்கோ இடைத்தரகர் களை நம்பி ஏமாற வேண் டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தில் செய்ய வேண்டியவை, கூடாதவை: சென்னை ஆட்சியர் அறிவுறுத்தல்



சென்னை, ஆக.21-

விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தின் போது சுற்றுச்சூழல் அழகையும், தூய்மையையும் பாது காக்கபொதுமக்கள் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை குறித்து மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தல் களை வழங்கியுள்ளார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்தவை விநாயகர் சதுர்த்திக்கு சுற்றுச் சூழலுக்கு உகந்த விநாயகர் சிலைகளைப் பயன்படுத்த வேண்டும். சிலைகளுக்கு நீர் சார்ந்த, இயற்கையாக மக்கக் கூடிய, நச்சுத்தன்மையற்ற இயற்கை சாயங்களையே பூச வேண்டும். அறிவிக்கப் பட்ட இடங்களில் மட்டுமே சிலைகளைக் கரைக்க வேண்டும்.

சுற்றுசூழலுக்கு உகந்த பூக்கள், இலைகள், துணிகளை மட்டுமே பூஜைப் பொருட்களாக உபயோகப்படுத்த வேண் டும். துவைத்து மீண்டும் உபயோகிக்கக் கூடிய துணிகளையும், எல்இடி பல்புகளையும் அலங்காரத் துக்கு பயன்படுத்தலாம். பிரசாத விநியோகத்துக்கு மக்கும் அல்லது மீண் டும் பயன்படுத்தக்கூடிய தட்டுகள் மற்றும் கண் ணாடி கோப்பைகளையே உபயோகிக்க வேண்டும்.

விழா முடிந்தவுடன் பொறுப்புடன் குப்பையை பிரித்து அப்புறப்படுத்த வேண்டும். பிளாஸ்டிக், ரசாயனம் வேண்டாம் விநாயகர் சதுர்த்திக்கு பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் வகை சிலைகளைப் பயன் படுத்தக் கூடாது.

சிலைகளை அலங் கரிக்க சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பிளாஸ்டிக், தெர்மாகோல், ஃபிலமென்ட் பல்புகள், ரசாயனப் பொருட்கள், எண்ணெய் வண்ணப் பூச் சுகள், சாயங்கள் ஆகிய வற்றை உபயோகப்படுத் தக் கூடாது. அதேபோல் பிளாஸ்டிக் மற்றும் தெர் மாகோலால் ஆன பொருட் களை பூஜைக்கு பயன் படுத்தக் கூடாது.

பண்டிகையின்போது ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியக் கூடிய பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் மற்றும் உறிஞ்சு குழாய் களை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். குறிப் பாக அனுமதி இல்லாத நீர் நிலைகளில் சிலைகளை கரைக்கக்கூடாது. குப்பை மற்றும் கழிவுகளை பொறுப்பற்று கொட்டக் கூடாது.

சுற்றுச்சூழலைப் பாது காப்பதில் தமிழகத்துக் கென நீண்ட கால பாரம் பரியம் உள்ளது. எனவே இந்த வழிமுறைகளைப் பின்பற்றி, விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத் தில், நமது சுற்றுச்சூழலின் அழகையும், தூய்மையை யும் பாதுகாப்பதற்கான நமது உறுதிப்பாட்டை நிரூபிக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு சென்னை மாவட்ட ஆட் சியர் கேட்டுக்கொண்டுள் ளார்.

## எஸ்.ஐ தேர்வில் புது நடைமுறை அமல்: பொதுப்பிரிவு, காவலர் ஒதுக்கீடு கிடையாது அரசாணை வெளியீடு



சென்னை, ஆக.21-

எஸ்.ஐ தேர்வில் இனி காவல் துறை இட ஒதுக்கீடு கிடையாது, அனைவ ருக்கும் ஒரே மாதிரியான எழுத்து மற்றும் உடல் தகுதி தேர்வு நடைபெறும் என தமிழக அரசு அரசாணை வெளி யிட்டுள்ளது.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 1,299 காவல் உதவி ஆய்வாளர் காலிப் பணியிடங்களை நிரப்பு வதற்கான அறிவிப்பை கடந்த மே 4ம் தேதி அதிகாரப்பூர்வமாக வெளி யிட்டது. இதையடுத்து, சுமார் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் ஆர்வமுடன் விண்ணப் பித்தனர். வழக்கமாக காவல் துறையில் 2ம் நிலை, முதல்நிலை மற்றும் தலைமைக் காவலர்களாக பணியில் உள்ளவர்களும் உதவி ஆய்வாளர் தேர்வுக்கு விண்ணபிப்பார்கள். இவர்களுக்கு 20 சதவீத ஒதுக்கீடு வழங்கப்படும். மீதம் உள்ள 80 சதவீதம் பொதுத் தேர்வர்களு க்கானது.

காவலர்களாக பணியில் சேர்ந்தவர்களுக்கு சட்டம் ஒழுங்கு, உளவியல் தொடர்புடைய கேள்விகள் கேட்கப்படும். அவர்கள் ஏற்கெனவே உடல் தகுதியை நிரூபித்து காவல் பணிக்கு சேர்ந்தவர்கள் என்பதால் உடல் தகுதி தேர்வு கிடையாது. ஆனால், பொதுப் பிரிவில் வருபவர் களுக்கு கூடுதலாக உடல் தகுதி தேர்வு நடத்தப்படும். அவர்களுக்கு சட்டம் தொடர்பான கேள்விகள் இருக்காது.

பொதுப்பிரிவு மற்றும் பணியில் உள்ள போலீஸாருக்கு தனித்தனி தேர்வு மற்றும் தனித்தனி மதிப்பெண் வழங்கப்படும். அதில் தேர்வானவர்களுக்கு எஸ்.ஐ பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் அவர்களுக்கு பதவி உயர்வில் முன்னுரிமை (சீனியாரிட்டி) வழங்க ப்படும். ஆனால், 20 சதவீத ஒதுக்கீட்டில் தேர்வானர்கள் அனைவரும் தேர்வின்போது பெற்ற மதிப்பெண் அடிப்படையில் முதலில் வைக்கப்பட்டு அதன் பின்னரே பொதுப் பட்டியலில் உள்ளவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக இடம் பெறுவார்கள்.

இதுவரை இப்படித்தான் நடந்து வருகிறது. ஆனால், அண்மையில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தேர்வின்போது பெற்ற மதிப்பெண் அடிப்படை யிலேயே சீனியாரிட்டி இடம்பெற வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. இது தொடர்பாக, 'இந்து தமிழ் திசை' நாளிதழில் செய்தி வெளியான நிலையில், பழைய நடைமுறைப்படி நடைபெற இருந்த தேர்வு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழக அரசு அரசாணை ஒன்றை நேற்று முன்தினம் வெளி யிட்டுள்ளது. அதில் தமிழக டிஜிபியின் பரிந்துரையை கவனமாக பரிசீலித்த தமிழக அரசு, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணய தலைவருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதில், 20 சதவீதம் காவல்துறை பணியாளர்கள், 80 சதவீதம் பொதுப்பிரிவு விண்ணப்பதாரர்கள் என அனைவருக்கும் ஒரே மாதிரியான பொதுத்தேர்வு நடத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எஸ்ஐ தேர்வுக்கான புதிய பொதுவான தேர்வு நடைமு றையை பின்பற்றவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதுதவிர, இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி, தமிழ் மொழித் தேர்வு, பொதுத்தேர்வு, பொது அறிவு தேர்வு ஆகியவையும், உயரம், மார்பளவு, ஓட்டப்பயிற்சி, உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், உள்ளிட்டவற்றில் ஆண், பெண் என இருதரப்பினரும் தேர்வு செய்யப்படும் முறை ஆகிய அனைத்து விவரங்களையும் அரசாணையில் தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், உதவி ஆய்வாளர் தேர்வானது இனிவரும் காலங்களில் அனைவருக்கும் ஒரே மாதிரியான எழுத்து மற்றும் உடல் தகுதி தேர்வாக இருக்கும். அதாவது காவலர்களுக்கான 20 சதவீத ஒதுக்கீடு இருக்காது என தமிழக அரசு அரசாணை வெளி யிட்டுள்ளது.



## குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் புத்தகங்கள் வெளியிட்டு விழா

தென்காசி, ஆக.21-

தென்காசி மாவட்டம், குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். அமிர்தவல்லி தலைமையில், நடைபெற்ற நிகழ்ச்சியில் தாவரவியல் துறையைச் சேர்ந்த டாக்டர் எம். செல்வி, எஸ், வனிதா, டி.செல்சியா ஆகியோர் எழுதிய இரண்டு புத்தகங்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது

குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தாவரவியல் சங்கம் 202526 தொடக்க விழாவின் போது கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். அமிர்தவல்லி தலைமையில் கோயம்புத்தூர் இந்திய தாவரவியல் ஆய்வு மையத்தின் விஞ்ஞானி டாக்டர் எம். பழனி சாமி, சர்வதேச தரநிலை கொண்ட இரண்டு புத்தகங்களை வெளியிட்டார்.

புத்தகங்களின் தலைப்பு: புத்தகம்: 1. நன்னீர் நுண்ணுயிரி ஆல்காவின் கையேடு: தென்னக ஸ்பாவில் கவனம் செலுத்துதல், குற்றாலம், தமிழ்நாடு, மற்றும் புத்தகம்: 2. "கல்லூரி வளாகத்தில் தாவர பன்முகத்தன்மையின் சரிபார்ப்பு பட்டியல்: மூலிகைகள் மற்றும் மரங்களின் ஆவணப் படுத்தலில் கவனம் செலுத்துதல் குற்றாலத்தின் ஐந்து வெவ்வேறு நீர்வீழ்ச்சிகளில் இருந்து காணப்படும் ஏழு வகை பாசிகளைச் சேர்ந்த 340 இனங்களின் வகைபிரித்தல் விளக்கத்தைப் பற்றி புத்தகம் 1 உள்ளடக்கியது, அதாவது ஐந்து நீர்வீழ்ச்சிகள், புலி நீர்வீழ்ச்சிகள், புதிய நீர்வீழ்ச்சிகள், பழைய நீர்வீழ்ச்சிகள் மற்றும் சித்தருவி, இந்தியாவில் 16 நீர்வீழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டன.

இது புதிதாக செய்யப்பட்ட 17வது பதிவு புத்தகம் 2, 88 மர இனங்கள், 141 சிறிய தாவரங்கள். 35 நடுத்தர மற்றும் ஏறும் தாவரங்கள், மூன்று ஒட்டுண்ணி தாவரங்கள் மற்றும் ஒரு எபிஃபைடிக் தாவரத்தை விவரித்தது. மொத்தம் 276 வெவ்வேறு தாவரங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த வகைகளில் 51 தாவர இனங்கள் ஏற்கனவே சிவப்பு பட்டியல் தரவுத்தளத்தில் பல்வேறு தாவர உயிரியலாளர் களால் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் புத்தகங்களின் ஆசிரியர்கள் தாவரவியல் துறையைச் சேர்ந்த டாக்டர் எம். செல்வி, எஸ், வனிதா, டி.செல்சியா ஆகியோர் அனைத்து பேராசிரியர்கள் மற்றும் நிறுவன அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.



## தாம்பரம் மாநகராட்சி 21வது வார்டு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது

பல்லாவரம், ஆக.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டலத்திற்கு உட்பட்ட 21வது வார்டு சார்பில் ஸ்ரீ பச்சையம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், அவர்கள் பார்வையிட்டு, பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களான தீர்வுகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர்கள் வெ.கலைசெல்வி, வட்ட கழக செயலாளர் வெங்கடேசன் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



பம்மலில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு காவல்துறை சார்பில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின்

## புதிய விநாயகர் சிலைகள் அமைப்பது குறித்து தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக இந்து பாரத முன்னனியின் நிறுவனர் அனகை செல்வம் பேட்டியளித்தார்

பம்மல், ஆக.21-

செங்கல்பட்டு மாவட்டம் பம்மலில் வருகின்ற 27 ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு காவல துறை சார்பில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பின்பு செய்தியாளர்களை சந்தித்த இந்து பாரத முன்னனி நிறுவனர் அனகை செல்வம் பேசு கையில் காவல் துறை சார்பில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் ஏற்கனவே அமைத்த விநாயகர் சிலைகள் அமைக்க வேண்டும் என கூறினார் ஆனால் புதியதாக விநாயகர் சிலைகள் அமைப்பது குறித்து தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும், இந்துக்கள் 80 சதவீதம் பேர் கொண்டாடும் விநாயகர் சதூர்த்தி பண்டிகையை மற்ற மாநிலங்களில் அரசு விழாவாக நடத்தபடுகிறது. தமிழகத்திலும் அரசு விழாவாக நடத்தபட வேண்டும் கோரிக்கையை முன் வைத்தும், விநாயகர் சிலைகள் செய்யும் போது அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு எந்தவித இரசாயண பொருள் பயன்படுத்தாமல் செய்வதாக தெரிவித்தார்.

## சிவகங்கை (உணவு பாதுகாப்பு) அலட்சியமாக செயல்படும் அரசு அதிகாரிகள்





சிவகங்கை, ஆக.21-

சிவகங்கை மாவட்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உணவகங்களில் தரம் இல்லாத உணவுகள் கிடைப்பதாகவும்அவ்வாறு வழங்கப்படும் உணவுகள் குறித்து சிவகங்கை உணவு கட்டுப்பாட்டு துறைக்கு தகவல் தெரிவித்தும் நடவடிக்கை எடுப்பதாக கூறி அவர்களிடம் இருந்து கையூட்டு பெற்று கொண்டு எந்த தகவலும் பெறவில்லை என்று மழுப்புகின்றனர் தரமற்ற உணவுகளை வழங்க கடைகள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்து உள்ளது. அது மட்டும் அல்லாது சிவகங்கை பகுதியில் முறையான ஆய்வு மேற்கொள்ளவில்லை என்றும் ஆழ்ந்த உறக்கத்தில் உணவு கட்டுப்பாட்டுத்துறை இருக்கிறது என்றும் சமூக ஆர்வலர் மட்டும் பொதுமக்கள் கூறி வருகின்றனர் அரசு மருத்துவக் கல்லூரி பகுதிகளில் கடந்த காலங்களில் உணவு கட்டுப்பாட்டு துறையினர் தவறாது தினமும் ஆய்வு மேற்கொண்டு வண்ணம் உள்ளனர் தற்பொழுது மாவட்ட உணவு கட்டுப்பாட்டு அதிகாரி காரைக்குடியில் இருப்பதால் சிவகங்கையில் பணியாற்றும் அனைவரையும் காரைக்குடி பகுதியில் ஆய்வு மேற்கொள்ளுங்கள் சிவகங்கை கண்டுகொள்ள வேண்டாம் என்று கூறுவதாகவும் அலுவலக வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது சிவகங்கை செயல்பட்டு வரும் அலுவலகத்திற்கு மாவட்ட உணவு கட்டுப்பாட்டு அதிகாரி வருவதே இல்லை என்றும் கூறுகிறார்கள் சிவகங்கை நகர் அரண்மனை வாசல் பகுதியில் ஏராளமான உணவகங்கள் உள்ளன அதில் பல ஏழை எளிய மக்கள் உணவு உட்கொண்டு வருகிறார்கள் அது தரம் இல்லாத எண்ணெய் மற்றும் காலை உணவை மதியம் பயன்படுத்துகிறார்கள் என்றும் கூறப்படுகிறது இவ்வாறு இருக்கும் சூழலில் உணவு கட்டுப்பாட்டு துறை முறையாக ஆய்வு மேற்கொண்டு அபராதம் பிரிப்பது தவறாக செயல்படும் கடைகளுக்கு சீல் வைப்பது மட்டுமே அவர்களின் பணி பெயரளவுக்கு மட்டுமே இருக்கும் ஆனால் அப்பணியை அவர்கள் சரிவர செய்வதில்லை கடை ஒன்று இருக்கு ரூபாய் 1000/ விதம் வசூல் செய்து பெரிய முதலீடு ஈட்டு வருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது கடையின் உரிமையாளர் மற்றும் கடைகளை பொறுத்தே இதன் விகிதம் மாறுபடுகிறது ஆதலால் பொதுமக்கள் உணவு சாப்பிட்டு எக்கேடு கெட்டால் என்ன அவர்கள் நோய்வாய்ப்பட்டு அவதியுற்றாலும் பரவாயில்லை எங்கள் வயிறு மட்டும் நிறைந்தால் போதும் என்று செயல்படுகிறார்கள் என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர் இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாக எழுந்துள்ளது..




## சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஆக.21-

சிவகங்கை மாவட்டத்திலிருந்து இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியினர், தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்த பின்னரும், கடந்த ஆறு ஆண்டுகளாக எவ்வித தேர்தலிலும் பங்கேற்காததன் காரணத்தை தெரிவிக்கும் பொருட்டு, அரசியல் கட்சியினருக்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியினருக்கு காரணம் கேட்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மனித நேய ஜனநாயக கட்சிக்கு சென்னையில் உள்ள முதன்மைத் தேர்தல் அலுவலகத்தில், வருகின்ற 26.8.2025ஆம் தேதிக்கு முன்னர் நேரில் ஆஜராகி காரணம் கேட்கும் அறிவிப்புக்கு விளக்கம் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

## கொடைக்கானலில் வானில் தோன்றிய 'வண்ணக் கலவை': மக்கள், சுற்றுலாப்பயணிகள் வியப்பு

கொடைக்கானல், ஆக.21-

கொடைக்கானல் வான் பரப்பில் தென்பட்ட வண்ண கலவை அதிசய நிகழ்வினை ஏராளமானோர் ஆர்வமுடன் பார்த்து வியந்தனர். திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வந்த நிலையில் நேற்று நீண்ட நாட்களுக்கு பிறகு வெப்பம் சற்று அதிகமாக நிலவியது. மேலும் வானம் நீல நிறத்துடன், வெண் மேகசுட்டங்களுடன் காட்சியளித்தது. அப்போது திடீரென மேகக்கூட்டங்கள் இடையே மழைக்கு பின் தோன்றும் வானவில் போல பல வண்ண கலவை தென்பட்டது.

சில நிமிடங்கள் மட்டும் தென்பட்ட இந்த வண்ண கலவை அதிசயத்தை பள்ளங்கி, கோம்பை, பூம்பாறை, பழம்புத்தூர் உள்ளிட்ட மலைக்கிராம மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கண்டு வியந்தனர். இதுகுறித்து வான் இயற்பியல் ஆராய்ச்சியாளர்களிடம் கேட்டபோது கூறுகையில், ''இது மிகவும் அரிதான நிகழ்வு. சூரிய ஒளி கதிர்கள் மேகக்கூட்டங்கள் மீது படும் போது இது போன்ற நிகழ்வுகள் நடைபெறும்'' என்றனர்.




## வேலூரில், காங்கிரஸ் அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியின் தியாகத் தலைவர் ராஜீவ்காந்தி 81ம் பிறந்தநாள் விழா

வேலூர், ஆக.21-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியின் தியாகத் தலைவர் ராஜீவ்காந்தி 81ம் பிறந்தநாள் முன்னிட்டு, அவரது திருவுருவ படத்திற்கு, மாநகர மாவட்ட தலைவர் டீக்காராமன் தலைமையில் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் போது காங்கிரஸ் கட்சியின் வேலூர் மாவட்ட செயலாளர் டி.வி.மோகன், மாநிலத் துணைத் தலைவர் (சட்டத்துறை) வழக்கறிஞர் மகாதேவன், மாநில எஸ்சி எஸ்டி பிரிவு பொறுப்பாளர் சித்தரஞ்சன், மண்டல தலைவர் ரகு, சேவா தளம் மாவட்ட தலைவர் அரிகிருஷ்ணன், 37வார்டு தலைவர் ஆனந்தன், மாவட்ட ஊடகப் பிரிவு தலைவர் விஜய்பிரபு, மகளிர் அணி தலைவர் காஞ்சனா மற்றும் நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் என பலர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்தனர்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.50 தைக்கால் தெரு பகுதியில் மத்திய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கட்டிடத்தை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள் அருகில் மதிப்பிற்குரிய மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.இந்திரா காந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

## குரோம்பேட்டையில் RTI இலவச சட்ட பயிற்சி மற்றும் சமூக ஆர்வலர்கள் சந்திப்பு கூட்டம் மக்களுக்கான மக்கள் இயக்கம் சார்பில் நடைபெற்றது




குரோம்பேட்டை, ஆக.21-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் மக்களுக்கான மக்கள் இயக்கம் சாரபில் RTI இலவச சட்ட பயிற்சி மற்றும் சமூக ஆர்வலர்கள் சந்திப்பு கூட்டம் குரோம்பேட்டை SCS மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மக்களுக்கான மக்கள் இயக்கம் ஸ்தாபகர் தலைவர் யந்திராலய நாணல் குருஜி சக்தி ஸ்ரீ வீரமணி சுவாமிகள் தலைமையில், மக்களுக்கான மக்கள் இயக்கம் பொதுச் செயலாளர் டாக்டர் தி.கார்த்திக் கண்ணன் ஏற்பாட்டில் மக்களுக்கான மக்கள் இயக்கம் துணை ஒருங்கிணைப்பாளர் கிருஷ் சந்தானம், மக்களுக்கான மக்கள் இயக்கம் துணைத் தலைவர் வழக்கறிஞர் எஸ்.ராமன், முன்னிலையில் மூத்த குடிமக்கள் நல சங்கம் தலைவர் எஸ்.மீனாட்சி சுந்தரம் வரவேற்பிலும் கூட்டம் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக பத்து ரூபாய் இயக்கம் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் டாக்டர் நல்வினை விஸ்வராஜூ கலந்துகொண்டு சட்டப் பயிற்சி வழங்கி சிறப்பு உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் வட்டார சாலை போக்குவரத்து அலுவலர் அருணாச்சலம், மின்சாரத்துறை அஸ்திவாரம் உதவி பொறியாளர் ஜேக்கப் ராபர்ட் வில்சன், மற்றும் தாம்பரம் மாநகர வாழ் மக்கள் நல சங்கங்களின் கூட்டமைப்பின் பல்லாவரம் பகுதி துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி.காந்தி, குரோம்பேட்டை பகுதி துணை ஒருங்கிணைப்பாளர் எம் வரதன், மக்களுக்கான மக்கள் இயக்கம் துணை ஒருங்கிணைப்பாளர் சந்தோஷ் குமார், கொள்கை பரப்பு செயலாளர் முகுந்தராவ், தன்னார்வலர் VLT ஆர்.கிருஷ்ணன், TRAFFIC வேணுகோபால், சமூக ஊடக பிரிவு ஒருங்கிணைப்பாளர் ஜெயா கிருஷ்ணன், பல்லாவரம் தொகுதி செயலாளர் ரியாஸ் அகமது, இளைஞர் அணி அமைப்பு செயலாளர் ஆர்.கே துளசிதரன், மாணவர் அணி துணை ஒருங்கிணைப்பாளர் தாரிக் மற்றும் மக்களுக்கான மக்கள் இயக்கம் நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உட்பட 300 கற்கும் மேற்பட்டோர் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

இந்நிகழ்ச்சியில் சட்ட பயிற்சி பெற்ற 300க்கும் மேற்பட்ட அனைவருக்கும் சான்று மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள், அரசு கௌரவ அழைப்பாளர்கள் அனைவருக்கும் சான்று, கேடயம் வழங்கப்பட்டது.

யோகா கலையில் கின்னஸ் உலக சாதனை படைத்த பள்ளி மாணவர்களை பாராட்டி சான்று கேடயம் மற்றும் IAS upsc preliminary பரீட்சையில் முதல் நிலையில் தேர்ச்சி பெற்ற மாணவிக்கு பாராட்டு சான்று மற்றும் கேடயம் வழங்கி மகிழ்விக்கப்பட்டது.

இறுதியில் மக்களுக்கான மக்கள் இயக்கம் பொதுச் செயலாளர் டாக்டர் தி.கார்த்திக் கண்ணன் நன்றி உரையாற்றினார்

# தென்காசி மாவட்டம்: நிறைந்தது மனம்- முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்




முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் என்பது தமிழ்நாடு அரசால் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் ஒரு சமூக நல திட்டமாகும். இந்த திட்டம், வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதோடு, அவர்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் உதவுகிறது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், தமிழ் நாட்டில் சமூக நலனுக்கான ஒரு முக்கியமான முயற்சியாகும், இது முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கியமான அடிப்படையாக விளங்குகிறது.

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடுதேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய நோக்கின் அடுத்த கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" செயல்படுத்தப்படுகிறது.

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்தினாளிகளும், என மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையிடமிருந்து பெறப்பட்டுகள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், மின்னணு எடைத்தராசு, e-PoS இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களைப் பாதுகாப்பாகத் தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.



70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொரு ட்கள் வழங்கும் இத்திட்டத்திற்கு அரசுக்கு 35.92 கோடி ரூபாய் செலவாகும். மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம், நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புறச் செய்வதுடன் அவர்தம் உணவுப் பாதுகாப்பையும் உறுதிசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடந்த (12.8.2025) அன்று தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து, முதலமைச்சரின் தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் மேலகரம் பேரூராட்சிக்குட்பட்ட நன்னகரம் பகுதியில் நியாய விலைக்கடைகளில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு வீடுகளுக்கே சென்று குடிமைப் பொருட்களை மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.சு.பழனி நாடார் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் தி.சதன் திருமலைக்குமார் ஆகியோர் வழங்கினார்கள்.

இத்திட்டத்தின் மூலம், தென்காசி மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை உள்ளிட்ட அனைத்து நிறுவனங்கள் நடத்தும் நியாய விலைக்கடைகளில் உள்ள 41,823 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்கள் அரிசி, சர்க்கரை உள்ளிட்ட குடிமைப் பொருட்களை பெற்று பயன்பெறுவார்கள்.

தாயுமானவர் திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் தெரிவித்ததாவது

என் பெயர் மாடத்தி.



சொந்த ஊர் தென்காசி மாவட்டம் நன்னகரம். எனக்கு வயது 70 வயதிற்கு மேல் ஆகிறது. என்னால் ரேசன் கடைக்கு சென்று வரிசையில் நின்று ரேசன் பொருட்களை வாங்குவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுமானவர் திட்டத்தின் மூலம் என் போன்ற வயதானவர்களுக்கு ரேசன் கடைகளுக்கு செல்லாமல் ரேசன் பொருட்களை வீடுகளுக்கு வந்து வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் எனக்கு வீட்டிற்கே வந்து அரிசி, பருப்பு, பாமாயில், சீனி, கோதுமை போன்ற பொருட்களை கொடுத்தார்கள். இத்திட்டத்தை கொண்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மனதார தெரிவித்துக்கொள்கிறேன்.


என் பெயர் ஈஸ்வரி.



சொந்த ஊர் தென்காசி மாவட்டம் நன்னகரம். எனக்கு வயது 72 வயதாகிறது. என்னால் ரேசன் கடைக்கு சென்று வரிசையில் நின்று ரேசன் பொருட்களை வாங்குவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால் ரேசன் பொருட்களை வாங்க வேறு யாரும் இல்லாததால் வேறு வழி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு கடைக்கு சென்று ரேசன் பொருட்களை வாங்கி வருவேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுமானவர் திட்டத்தின் மூலம் என் போன்ற வயதானவர்களுக்கு ரேசன் கடைகளுக்கு செல்லாமல் ரேசன் பொருட்களை வீடுகளுக்கு வந்து வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் எனக்கு வீட்டிற்கே வந்து அரிசி, பருப்பு, பாமாயில், சீனி, கோதுமை போன்ற பொருட்களை கொடுத்தார்கள். இத்திட்டத்தை கொண்டு வநத தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளியீடு:
**ஏ.எடிசன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**ரா.ராமசுப்பிரமணியன்,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி),
தென்காசி மாவட்டம்.

## அரசு விதிமுறைகளை மீறும் மாவட்ட மேலாளர்: தனியார் சொந்த வாகனத்தை வாடகை உபகரணமாக மாற்றிய மாவட்ட மேலாளர்







சிவகங்கை, ஆக.21-

சிவகங்கை டாஸ்மார்க் மாவட்ட மேலாளராக பணியாற்றி வருபவர்கள் கடந்த இரண்டு காலகட்டங்களாக தனியார் வாகனத்தை தனி நபருக்கு சொந்த வாகனத்தை வாடகை உபகரணமாக மாற்றி பயன்படுத்திக் கொண்டு அந்த வாகனத்தில் துணை ஆட்சியர் என்ற பெயர் பதாகை பதித்து உலா வருவதாக சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு இதுகுறித்து மாவட்ட மேலாளர் இடம் கேட்ட பொழுது அவ்வாறு ஏதேனும் தகவல் இருந்தால் எங்களுக்கு அனுப்புங்கள் அது குறித்து தெரிந்து கொள்கிறேன் என்ற பதில் அளித்தார் ஆனால் மோட்டார் வாகன சட்டத்தின் படி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் இடம் கேட்ட பொழுது அவர் கூறியதாவது தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தும் வாகனத்தை ரத்த சொந்தங்கள் அல்லாது பிறருக்கு கமர்சியல் அதாவது வாடகை ஒப்பந்தம் பேரில் பயன்படுத்தக் கூடாது என்ற தகவலை தெரிவித்தார் அது மட்டுமல்லாது வாகனத்தில் யார் பெயரில் உள்ளதோ அவர்கள் ஓட்டுநர் பயன்படுத்திக் கொள்ளலாம் அதை தவிர்த்து சம்பந்தமில்லாத வாகனத்திற்கு அதற்கும் உரிமை அல்லாத நபர்கள் அந்த வாகனத்தில் பயணிக்க கூடாது என்பதே மோட்டார் வாகன சட்டத்தின் சாராம்சமாகும் இதை முறியடிக்கும் விதமாகவும் அரசாங்க முக்கிய பொறுப்பில் பணியாற்றும் நபர் தனது சொந்த தேவைக்காக வாகனங்களை பயன்படுத்துவது சட்டவிரோதமான செயலாகவே கருதப்படுகிறது இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கை , மாவட்ட ஆட்சியர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே வாடகை வாகனம் ஓட்டும் ஓட்டுநர்களின் கோரிக்கையாக உள்ளது:

## சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஆக.21-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ராமநாதபுரம் வீட்டு வசதி பிரிவிற்குட்பட்ட ராமநாதபுரம் மாவட்ட மற்றும் சிவகங்கை மாவட்ட திட்டப் பகுதிகளில் உள்ள மனைகள், வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகளில் (சுயநிதி திட்டம் (ம) வணிக மனைகள் நீங்கலாக) ஒதுக்கீடு பெற்று, 31.3.2015 ஆம் தேதிக்கு முன்பு தவணைக் காலம் முடிவுற்றும் தவணைத் தொகை செலுத்தாத ஒதுக்கீடுதாரர்களுக்கு, தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மூலம் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அரசாணை எண். 116 நாள்: 04.08.2025ன் படி வட்டி சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில், மாதத் தவணைக்கான அபராத வட்டி முழுமையாக தள்ளுபடி, வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி முழுமையாக தள்ளுபடி, நிலத்திற்கான இறுதி விலை வித்தியாச தொகையில், ஒவ்வொரு ஆண்டுக்கும் 5 மாத வட்டி தள்ளுபடி போன்ற வட்டி தள்ளுபடி சலுகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 31.3.2015 ஆம் தேதிக்கு முன்னர் தவணை காலம் முடிவுற்ற ஒதுக்கீடுதாரர்கள் நிலுவைத் தொகையினை அறிந்து, ஒரே தவணையில் தொகையினை செலுத்தி, குறிப்பிட்டுள்ள வட்டி சலுகை திட்டத்தின் மூலம் பயன்பெற்று, கிரையப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே தவணைத் தொகை சரிவர செலுத்தாத ஒதுக்கீடுதாரர்கள் இச்சலுகையினை பயன்படுத்திக் கொண்டு, வருகின்ற 31.3.2026 ஆம் தேதிக்குள் வட்டி தள்ளுபடி போக செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை ஒரே தவணையாக செலுத்தி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




## கீழக்கோட்டையில் தேசிய அறிவியல் மனப்பான்மை தினம்



சிவகங்கை, ஆக.21-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தேசிய அறிவியல் மனப்பான்மை தினம் கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலை மை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவி வசந்த மலர் முன்னிலை வகித் தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரை ஆற்றினார். சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி மண்ணுக்கும் மக்களுக்கும் சேவை புரிந்த மருத்துவர் நரேந்திர தபோல்கர் நினைவு தினமானது தேசிய அறிவியல் மனப்பான்மை தினமாக ஏன்? கடைபிடிக்கப்படுகிறது என்பதை கூறி இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 51கி(பி) அறிவியல் கண்ணோட்டம் அறிவியல் மனப்பான்மை அறிவியல் பார்வை பெறுவது அனைத்து குடிமக்களுடைய அடிப்படை கடமையாகவே வரையறை செய்யப்பட்டுள்ளது என்பதை சுட்டிக் காட்டி சிறப்புரையாற்றினார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா தேசிய அறிவியல் மனப்பான்மை தின உறுதிமொழி கூற ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். முன்னதாக மகிழ் முற்றம் சார்பாக குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை அணிகளிலுள்ள மாணவ மாணவிகள் தேன்சிட்டு ஊஞ்சல் இதழ்களை வாசி க்கும் வாசிப்பு பயிற்சியில் கலந்து கொண்டனர். ஆசிரியை கமலம்பாய் நன்றி கூறினார்.

## கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் மற்றும் கருங்கல் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்துரையாடல்




கன்னியாகுமரி, ஆக.21-

கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் மற்றும் கருங்கல் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா. மாணவ மாணவியர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடி, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்ட மாணவ மாணவர்களின் கல்வி அடைவினை மேம்படுத்துவதற்காக பல் வே று முன்னெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில் இரணியல் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களிடம் கலந்துரையாடி, அவர்களின் எதிர்கால குறிக்கோள்கள் குறித்து கேட்டறியப்பட்டது. தொடர்ந்து மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்து ஆசியர்களிடம் கேட்டறி யப்பட்டது. மாணவர்களிடம் பாடங்களில் ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் ஆசிரியர்களை அணுகி நிவர்த்தி செய்துவிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பள்ளிக்கு ஒழுங்காக வருகை புரியாத மாணவனிடம், ஒழுங்காக பள்ளிக்கு வருகை புரிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. கற்றல் திறனில் பின்தங்கியுள்ள மாணவ மாணவியர்களுக்கு சிறந்த முறையில் அவர்களுக்கு புரியும் வண்ணம்மாக கற்பிக்க வேண்டுமென ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் அரசுபள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கு உயர்கல்வி தொடரும் போதே புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000, 6ம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் சிறந்த கல்லூரிகளில் உயர் கல்வியை தொடர வாய்ப்புள்ளது. 75 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ் உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கு அனைத்து கல்வி கட்டணங் களில் இருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது. அதனடிபடையில் நமது மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் பயின்ற சுமார் 400 மாணவர்கள் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ் உயர்கல்வியில் சேர்ந்துள்ளார்கள். எனவே இத்தகைய வாய்ப்புகளை முழுமையாக மாணவர்கள் தெரிந்துகொண்டு, நீங்கள் நன்றாக பயின்று, பள்ளிப்படிப்பை முடித்து உயர்கல்வி பயின்று வாழ்வில் முன்னேற்றம் பெறவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா. தெரிவித்தார்.

முன்னதாக கருங்கல் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

நடைபெற்ற ஆய்வில் தலைமையாசிரியர். ஆசிரியர்கள் மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வருடாந்திர பாஸ்டேக் திட்டத்துக்கு அமோக வரவேற்பு: 4 நாட்களில் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பதிவு




புதுடெல்லி, ஆக.21-

புதிய பாஸ்டேக் வருடாந்திர பாஸ் திட்டத்துக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளதன் காரணமாக அறிமுகம் செய்யப்பட்ட 4 நாட்களில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பயனாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) கூறியுள்ளதாவது: தனியார் வாகனங்கள் ரூ.3,000 கட்டணம் செலுத்தி வாங்க கூடிய பாஸ்டேக் பாஸ் திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (ஆக.15) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் வாகனங்கள் சுங்கச் சாவடியை ஓராண்டு அல்லது 200 முறை கடந்து செல்ல முடியும்.

இந்த நிலையில், கடந்த நான்கு நாட்களில் மட்டும் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பயனாளர்கள் இந்த பயண அட்டையை பெறுவதற்காக பதிவு செய்துகொண்டுள்ளனர். அதிக எண்ணிக்கையில் வருடாந்திர பாஸ் வாங்கப்பட்ட பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

அதைத் தொடர்ந்து, கர்நாடகா, ஆந்திரா, ஹரியானா மாநிலங்கள் உள்ளன. பாஸ்டேக் வருடாந்திர பாஸ் திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் நாளான ஆகஸ்ட் 15ம் தேதி மாலை 7 மணி நிலவரப்படி 1.4 லட்சம் பயனாளர்கள் இந்த வருடாந்திர பாஸை வாங்கி பயன்படுத்த தொடங்கிவிட்டனர். சுங்கச் சாவடிகளில் சுமார் 1.39 லட்சம் பரிவர்த்தனைகள் பதிவாகியுள்ளன. இவ்வாறு நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது. பாஸ்டேக் வருடாந்திர பாஸை வாங்கி செயல்படுத்துவதற்கான அதிகாரப்பூர்வ தளமான ராஜ்மார்க்யாத்ரா செயலி கூகுள் பிளே ஸ்டோரில் முதலிடத்தில் உள்ள அரசு செயலியாக மாறியுள்ளது. ஒட்டுமொத்தமாக 23வது இடத்திலும், பயணப் பிரிவில் 2வது இடத்திலும் உள்ளது. 15 லட்சத்துக்கும் அதிகமான பதிவிறக்கங்கள் செய்யப்பட்டு 4.5 நட்சத்திர மதிப்பீட்டை இந்த செயலி பெற்றுள்ளது. தேசிய நெடுஞ்சாலை ஆணைய தரவுகளின்படி ஒரே நேரத்தில் சுமார் 20,000 முதல் 25,000 பேர் வரை ராஜ்மார்க் யாத்ரா செயலியை பயன்படுத்துகின்றனர். தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள 1,150 சுங்கச்சாவடிகளில் இந்த பாஸ்டேக் வருடாந்திர பாஸை பயன்படுத்தி தனியார் வாகனங்கள் தடையின்றி பயணிக்கலாம்.







## வேலூர் வேலப்பாடியில் 44, 45வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினருமான அஸ்மிதா கோபி தலைமையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

### எம்எல்ஏ கார்த்திகேயன் மற்றும் கலெக்டர் சுப்புலட்சுமி ஆகியோர் பங்கேற்பு

வேலூர், ஆக.21-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 3, வேலப்பாடி செல்வ விநாயகர் தனியார் திருமண மண்டபத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் வார்டு 44 45வது வார்டு மாமன்ற உறுப்பினரும், அறங்காவலர் குழு உறுப்பினருமான அஸ்மிதா கோபி, தலைமையில் நடை பெற்றது. இதில் சிறப்பு பார்வை மற்றும் கண்காணிப்பாளராக மாவட்ட ஆட்சியர் சுப்பு லெட்சுமி, இந்த முகாமை மற்றும் மருத்துவ அரங்கில் பொதுமக்கள் பரிசோதனை மேற்கொள்வதை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், 3 வது மண்டல குழு தலைவர் கே.யூசுப்கான், துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த ஆர்வலர்கள் இந்திய விமானப்படையில் 2026ஆம் ஆண்டிற்கான அக்னிவீர்வாயு ஆள்சேர்ப்பிற்கு விண்ணப்பிக்கலாம்

### மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்




தென்காசி, ஆக.21-

இந்திய விமானப் படையில் 2026ஆம் ஆண்டிற்கான அக்னிவீர்வாயு ஆள்சேர்ப்பிற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான், நிக்கோபார் தீவுகள் ஆகிய இடங்களில் வசிப்போருக்கான அக்னிவீர்வாயு (OS) பணிக்கான திறந்தவெளி ஆட்சே ர்க்கை தேர்வு 02.09.2025 முதல் ஆண்களுக்கும் 05.09.2025 முதல் பெண்களுக்கும் நடைபெற உள்ளது. விண்ணப்பதாரர்கள் 01.01.2005 முதல் 01.07. 2008 தேதிகளுக்குள் பிறந்திருக்க வேண்டும். இப்பணியிடத்திற்கான கல்வித்தகுதியாக 12ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான பாடப்பிரிவில் குறைந்தபட்சம் 50 சதவீத மதிப்பெண்ணுடன் தேர்ச்சி மற்றும் ஆங்கில பாடத்தில் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும் பாலிடெக்னிக் கல்வித் தகுதி உடையவர்கள், 3 வருட டிப்ளமோ தேர்வில் குறைந்தபட்சம் 50 சதவீத மதிப்பெண்ணுடன் தேர்ச்சி மற்றும் ஆங்கில பாடத்தில் 50 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்சம் 152 செ.மீ உயரம் உடைய ஆண்கள் மற்றும் பெண்கள் மட்டுமே இத்தேர்விற்கு தகுதியுடையோர் ஆவர். அக்னிவீர்வாயு (OS) பணிக்கு திருமணமாகாத ஆண்கள் மற்றும் பெண்கள் விண்ணப்பிக்கலாம். இந்த பணியிடத்திற்கான திறந்த வெளி தேர்வு சென்னை தாம்ப ரத்தில் உள்ள விமான ப்படை தேர்வு மையத்தில் நடைபெற உள்ளது. மேலும் இது குறித்தவிவ ரங்களுக்கு https://agnipathvayu.cdac.in என்ற இணையதளத்தின் வாயிலாக அறியலாம். இந்திய விமானப்படையில் இணைந்து பணியாற்ற விரும்பும் ஆர்வலர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.



## கணியம்பாடி அடுத்த வேப்பங்குப்பம் மற்றும் கனி கணியான் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

### ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் பங்கேற்பு

வேலூர், ஆக.21-

வேலூர் மாவட்டம், கணியம்பாடி வட்டம், கணியம்பாடி அடுத்த கணிக்கனியான் ஊராட்சி குமரன் தனியார் திருமண மண்டபத்தில், கணிக்கனியான் மற்றும் வேப்பங்குப்பம் ஆகிய ஊராட்சிகள் அடங்கிய பொதுமக்களுக்கு, உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜன் மற்றும் ஏழுமலை ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராகஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் பங்கேற்று முகாமை பார்வையிட்டு பொதுமக்களுடன் கனிவுடன் கலந்துரையாடி கோரிக்கை மனுக்களை பெற்று கோரிக்கைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வழங்கி இணையத்தில் பதிவேற்றம் செய்தனர். இம்முகாமில் ஒன்றிய குழு தலைவர் திவ்யா கமல் பிரசாத், துணைத் தலைவர் கஜேந்திரன், வட்டாட்சியர் வடிவேலு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரெகுலர் பி டி ஓ சத்தியமூர்த்தி, திட்ட பி டி ஓ திருமலை, மற்றும் அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று பதிவேற்றம் செய்தனர்.

## சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்



திருப்பூர், ஆக.21-

திருப்பூர் மாவட்டம், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து, காவல் துறையினரின் அணிவகுப்பினை பார்வையிட்டு, அணிவகுப்பு மரியாதையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டார். பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வெண்புறாக்களையும், வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார். தொடர்ந்து, சிறந்த காவலர்கள் (காவல் ஆணையாளர் அலுவலகம்) 34, (மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்) 20 என மொத்தம் 54 காவல் துறையினருக்கு பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் சிறப்பாக பணிபுரிந்த 159 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு என மொத்தம் 213 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். பின்னர், சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசு தாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள்

இன்றைய விழாவில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 01 பயனாளிக்கு ரூ.1.01 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டரையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 02 பயனாளிக்கு கலைஞர் கைவினைத்திட்டத்தின் கீழ் ரூ.2.65 இலட்சம் மதிப்பீட்டிலும், தாட்கோ சார்பில் நரிக்குறவ மக்களுக்கு சங்கங்களின் வழியே கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டிலும், தூய்மைப்பணியாளர்கள் 2 நபர்களுக்கு ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டிலும், முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.18.22 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தொழிலாளர் நலத்துறையின் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 04 பயனாளிகளுக்கு ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் இயற்கை மரண உதவித் தொகையினையும், 16 பயனாளிக்கு ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகையினையும், 02 பயனாளிகளுக்கு ரூ.40,000/ மதிப்பீட்டில் திருமண உதவித் தொகையினையும், 08 பயனாளிகளுக்கு ரூ.9,600/ மதிப்பீட்டில் ஒய்வூதிய உதவித்தொகையினையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் 02 பயனாளிக்கு ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் குறைந்த விலை வெங்காய சேமிப்பு பட்டறை கடனுதவியையும், வேளாண்மைத்துறையின் சார்பில் தமிழக முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 02 பயனாளிகளுக்கு ரூ.2500/ மதிப்பீட்டில் பசுந்தாள் உர விதைகளையும், நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.24,000/ மதிப்பீட்டில் நீர் தெளிப்பானையும், 01 பயனாளிக்கு ரூ.1.21 இலட்சம் மதிப்பீ ட்டில் சொட்டு நீர் கடனுதவியையும்,

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித்திட்டதின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.5700/ மதிப்பீட்டிலும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண்மை இயந்திரமாயமாக்குதல் உப இயக்கத்தின் கீழ் 02 பயனாளிக்கு ரூ.5.63 இலட்சம் மதிப்பீட்டிலும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கினைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கான ஆழ்துளை கிணறு அமைக்கும் திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டிலும், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.4.42 இலட்சம் மதிப்பீட்டிலும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.66,900/ மதிப்பீட்டில் தையல் இந்திரத்தினையும், 03 பயனாளிகளுக்கு ரூ.21,750/ மதிப்பீட்டில் இலவச தேய்ப்பு பெட்டியையும் என மொத்தம் 64 பயனாளிகளுக்கு ரூ.86,98,610/ மதிப்பீட்டிவல் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, இ.ஆ.ப அவர்கள் வழங்கினார்கள்.

தொடர்ந்து, பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பழங்கரை எஸ்.கே. எல் மெட்ரிக் பப்ளிக் மேல்நிலைப்பள்ளி, குமார் நகர் நகரவை அரசு மேல்நிலைப்பள்ளி, அங்கேரிபாளையம் கொங்கு வேளாளர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அவிநாசி செயின்ட் தாமஸ் மகளிர் அரசு மேல்நிலைப்பள்ளி, ஜெய்வாபாய் மாதிரி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, தாராபுரம் செயின்ட் அலோசியஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஐயங்காளிபாளையம் வி.கே. அரசு மேல்நிலைப்பள்ளிகளை சார்ந்த 784 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளின் கீழ் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, இ.ஆ.ப பார்வையிட்டார்கள்.

இவ்விழாவில், மாநகர காவல் ஆணையர் திரு.எஸ்.ராஜேந்திரன் இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.யாதவ் கிரிஷ் அசோக் இ.கா.ப. அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன் அவர்கள், மாநகர துணை காவல் ஆணையர்கள் திருமதி தீபா சத்தியன் இ.கா.ப., திரு.பிரவீன் கௌதம் இ.கா.ப, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி சங்கமித்திரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் "(பொது) திரு.மகாராஜ், துணை ஆட்சியர்கள், காவல் துறையினர், பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## வேலூர் அடுத்த அணைக்கட்டு இலவம்பாடி ஊராட்சியில் சமீப மழைக்கு முற்றிலும் பயிர் சேதம்: கண்ணீர் விடும் விவசாயி

### தமிழக அரசுக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் நெற்பயிர் சேதத்திற்கான உரிய இழப்பீடு வழங்க கோரிக்கை

வேலூர், ஆக.21-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, இலவம்பாடி ஊராட்சி, இலவம்பாடி கிராமம், ஏ.கே.மணி த/பெ குப்புசாமி என்பவர் விவசாயம் செய்து வருகின்றார். கடந்த ஜூன் மாதத்தில் ஆணிக்கார் பட்டம், ஒரு ஏக்கருக்கு மேல், மகேந்திரா நெல் வகை பயிரிடப்பட்டு வந்துள்ளார், பயிரானது வளர்ந்து அறுவடை செய்யும் வேலையில் சமீபத்தில் பெய்த தொடர் மழை காரணமாக நெற்பயிர் சாய்ந்து முற்றிலும் சேதம் அடைந்து முளைத்துள்ளது. இது குறித்து விவசாயி கூறுகையில் கடந்த 2022 ஆம் ஆண்டு இதே நிலை தற்போதும் இதே நிலை, என பயிர் சேதம் அடைந்துள்ளதை தெரிவித்துள்ளார். இது நல்ல முறையில் விளைந்து அறுவடை செய்து இருந்தால் சுமார் 40 மூட்டையிலுருந்து 50 மூட்டை நெல் விளைந்திருக்கும் என கூறுகின்றார். ஆனால் தற்போது சேதமடைந்ததை பொறுத்துக் கொள்ள முடியவில்லை என கண்ணீர் மல்க தெரிவிக்கின்றார். இது குறித்து தமிழக அரசு உரிய பயிருக்கான இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார். கடந்த முறையும் அனைத்து ஆவணங்களும் சமர்ப்பித்து இதுவரை அந்த இழப்பீடுத் தொகை பெறவில்லை எனவும், கடந்த முறை இழப்பீடு தொகை மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள பயிர் சேதத்திற்கும் இழப்பீடு தொகை வழங்க தமிழக அரசுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் கோரிக்கை வைத்துள்ளார்.



■ தென்காசி மாவட்டம் கடையநல்லூர் பகுதியில் தேசிய புலனாய்வு முகமை (NIA) நேற்று அதிகாலை 5.00 மணி முதல் சோதனை நடத்தி வந்த நிலையில் தற்போது நிறைவு பெற்றுள்ளதுஞ் வெளிநாட்டில் உள்ள முகமது அலி என்பவர் மீதுள்ள சந்தேகத்தின் அடிப்படையில் இவ்விசாரணை நடைபெற்றதாக கூறப்படுகிறது. மேற்கொண்டு விசாரணை சம்பந்தப்பட்ட எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை. இதனால் அப்பகுதியில் பரபரப்பானா சூழ்நிலை நிலவுகிறது.




## வேலூர் அடுத்த தெள்ளூர் மற்றும் சேக்கனூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஆக.21-

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், வேலூர் அடுத்த தெள்ளூர் மற்றும் சேக்கனூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம், ஊராட்சி மன்ற தலைவர்கள் தேவி சுரேஷ் மற்றும் மாலதி சுரேஷ் ஆகியோர் தலைமையில் இரு ஊராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் பயனடைய உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன், துணைத் தலைவர் மகேஸ்வரி காசிநாதன், மாவட்ட கவுன்சிலர் த.பாபு ஆகியோர் கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டனர். இந்த முகாமில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என் செழியன், வட்டாட்சியர் வேண்டா, வட்டார வளர்ச்சி அலுவலர் வின்சென்ட் ரமேஷ்பாபு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மகாலட்சுமி, ட்ரிபிள் எஸ் தாசில்தார் சிவசங்கரன், மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் பணியாளர்கள் பல பலர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனு பெற்று பதிவேற்றம் செய்து கொண்டனர். இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வருவாய்த்துறை, மின்சாரத்துறை, மகளிர் உரிமைத்தொகை சமூக நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வு துறை, வேளாண்மை துறை மற்றும் அரசு சார்ந்த அனைத்து துறைகள் முகமிட்டு என் கோரிக்கை முறைகளைப் பெற்று பதிவேற்றம் செய்துள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி அனுப்பானடி மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள நாடக மேடையினை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.பூமிநாதன் அவர்கள், ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்கள் அருகில் துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள், கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள், மாமன்ற உறுப்பினர் திருமதி.பிரேமா அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161